# SWOAD

## Social Welfare organization Ampara District

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு

# ஆண்டறிக்கை - 2020





Sagama Road, Akkaraipattu, Sri Lanka
Tel:067-2277276, 0772242265
E-mail: swoad@sltnet.lk
Web:swoad.lk
Face book: Swoad New Akkaraipattu.


SWOAD

## நிறுவனம் பற்றிய அறிமுகம்.

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பானது (SWOAD), அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு நலிவுற்ற நிலையில் வாழும் மக்களின் தேவைகளை நிறைவு செய்தலை இலக்காகக் கொண்டும், சிறந்த முறையிலான சேவைகளையும் சம வாய்ப்புக்களையும் வழிமுறையாகக் கொண்டும் 1995ம் ஆண்டு திரு.ச.செந்துராஜா அவர்களினால் ஸ்தாபிக்கப்பட்டு அவரின் ஆலோசனை,வழிகாட்டலுடன் செயற்பட்டு வருகின்றஓர் அரச சார்பற்ற அமைப்பாகும்.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 53 கிராமக் கிளைகளில் மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 6 பிரதேச செயலாளா் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 53 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு,5101அங்கத்தவர்களையும்,47 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

## செயற்பாட்டு பிரதேசமும், அங்கத்தவர் எண்ணிக்கையும்.

| பிரதேசம் | கிராமங்களின் எ-கை | மொத்த அங் எ-கை. | குழுக்களின் எ-கை |
|---|---|---|---|
| பொத்துவில் | 09 | 784 | 46 |
| திருக்கோவில் | 16 | 1734 | 76 |
| காரைதீவு | 05 | 525 | 22 |
| கல்முனை | 08 | 677 | 47 |
| சம்மாந்துறை | 06 | 673 | 40 |
| நாவிதன்வெளி | 09 | 708 | 56 |
| | | | |
| **மொத்தம்** | **53** | **5101** | **287** |

## வாழ்வாதாரத் திட்டம்.

மக்கள் சுய தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தினை அதிகரித்து அவர்களை சுயமாகச் செயற்பட வைப்பதன் ஊடாக தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு சுவாட் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட **733** பயனாளிகளிக்கு **50,068,823.45**ரூபாய் நிதியானது சேமிப்புக் கடன் திட்டத்தின் ஊடாக அவர்களின் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

| Division | No.of.Beneficiary | Amount |
|---|---|---|
| Pottuvil | 39 | 1,412,472.30 |
| Thirukkovil | 191 | 11,368,001.90 |
| Karaithivu | 134 | 10,216,494.15 |
| Kalmunai | 61 | 7,795,000.00 |
| Sammanthurai | 90 | 10,054,267.10 |
| Navithanveli | 215 | 8,322,588.00 |
| Alayadivembu | 3 | 900,000.00 |
| **Total** | **733** | **50,068,823.45** |

## மரணாதாரத் திட்டம்.

அரசாங்க உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களை மையமாகக் கொண்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இவ் மரணாதாரத்திட்டத்தில் வருடத்திற்கு 200.00 ரூபாய் மரணாதாரத்தொகை செலுத்தும் அங்கத்துவ குடும்பம் ஒன்றிக்கு மரணாதார உதவுதொகையாக 10,000.00 ரூபாய் இத்திட்டத்தினூடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இவ்வருடம் 59 அங்கத்துவகுடும்பங்களுக்கு 510,000.00ரூபாய் மரணாதார உதவு தொகையாக வழங்கப்பட்டுள்ளதுடன், 986 அங்கத்துவ குடும்பங்களிடம் 781,030.00 ரூபாய் மரணாதார நிதியாகவும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

| Division | No.of.Beneficiary (Death Subscription) | Amount | No.of.Beneficiary (Death Donation) | Amount |
|---|---|---|---|---|
| Pottuvil | 52 | 101,260.00 | 05 | 43,000.00 |
| Thirukkovil | 303 | 201,915.00 | 15 | 99,000.00 |
| Karaithivu | 174 | 107,980.00 | 12 | 120,000.00 |
| Kalmunai | 207 | 129,125.00 | 15 | 135,000.00 |
| Sammanthurai | 41 | 101,715.00 | 06 | 60,000.00 |
| Navithanveli | 209 | 139,035.00 | 06 | 53,000.00 |
| **Total** | **986** | **781,030.00** | **59** | **510,000.00** |

## சிறுவர் அபிவிருத்தி திட்டம்.

### 01.பாலர் பாடசாலை நடாத்தல்.

சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 15 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலைகளில் 29 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 415 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருவதுடன், இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களினால் எதிர் நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## சமூக அபிவிருத்தி செயற்திட்டம்.

**01. கிராமிய மட்டத்தில் சுயசார்புக் குழுக்களை உருவாக்கி இக்குழுக்களூடாக அக்கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சமூகப் பொருளாதார நிலையில் நலிவுற்று பாதிக்கப்பட்ட மக்களை குழுக்களாக ஒன்றிணைத்து அவர்களுக்குத் தேவையாக வழிகாட்டல், ஆலோசனைகள், உதவிகளை வழங்கி, அவர்கள் தமது சுய நடவடிக்கைகளின் ஊடாக நீடித்து நிலைத்திருக்கத் தக்கதும், கொளரவமானதுமான தன்னிறைவான வாழ்க்கையை வாழும் நிலையினை உருவாக்கும் நோக்கில் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலுமுள்ள 53 கிராமக் கிளைகளில் 287 சுய சார்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு இக்குழுக்களின் ஊடாக அக்கிராம அபிவிருத்தி செயற்திட்டங்களானது சுவாட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.1 **குழுக்கூட்டம் நடாத்தல்:** இவ்வருடம் 6 பிரதேசங்களிலுமுள்ள 287 சுயசார்புக் குழுக்களிம் 2654 குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதில் 16331 அங்கத்தவர்கள் கலந்துகொண்டு தமது குழு அங்கத்தவர்களின் தேவை, பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி அவற்றுக்கு தீர்வு காண்பதற்கான வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்கி அவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், தமது பொருளாதார முன்னேற்றத்திற்கும், குழு மேம்பாட்டிற்கும், மற்றும் அக்கிராம அபிவிருத்திக்குமான பல்வேறு குழுச் செயற்பாடுகளிலும் பங்கேற்றுள்ளனர்.





இக்குழுக்களினூடாக இவ்வருடம் கீழ் குறிப்பிடப்பட்ட குழுச்செயற்பாட்டுகள் 6 பிரதேச மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (COVID-19 தொற்றுநோய் பிரச்சினை காரணமாக குறைந்தளவான செயற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன.)

01. வருமானம் தரும் உள்ளூர் உற்பத்திகளை குழுவாக இணைந்து மேற்கொண்டு விற்பனை செய்து கிடைக்கப்பெறும் வருமானத்தை குழுச்சேமிப்புச் செய்துள்ளனர்.
02. பொது இடங்களில் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
03. பயிர் விதைகள், பழமரக் கன்றுகளை குழு அங்கத்தவர்களுக்கு வழங்கி வீட்டுத்தோட்டத்தினை ஊக்குவித்தல்.

04. கோயில், பாடசாலை, நூலகம் போன்ற பொது இடங்களில் பயன்தரும் பழ மரங்கள் நடப்பட்டுள்ளன.
05. வறிய மாணவர்களுக்கும், இயலாமைக்கு உட்பட்டவர்களுக்கு குழுவாக இணைந்து பாடசாலை உபகரணங்கள், உலர் உணவுப் பொதிகள் வழங்கியுள்ளனர்.
06. குழு அங்கத்தவர்களுக்குத் தேவையான முக கவசம் பெற்று வழங்கியுள்ளனர்.
07. மானிய முறையில் மூலப்பொருட்களை பெற்று குழு அங்கத்தவர்களுக்கு வழங்கியுள்ளனர்.
08. அங்கத்தவர்களின் கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டுள்ளன.







**02. கிளை , பிரதேச ரீதியாக நிருவாகங்களை அமைத்து மாதாந்த கலந்துரையாடல்கள் மூலம் கிராம மட்ட தேவை, பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

அங்கத்தவர்களது குடும்ப முன்னேற்றத்திற்கும், கிராம, சமூக,பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் வகையில் மாதம் ஒரு தடவை 53 கிளைகளிலும் கிளை நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்களும், 6 பிரதேசங்களிலும் பிரதேச நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டு கிளை, பிரதேச ரீதியான செயல் முன்னேற்றங்கள் குறித்தும், சவால்கள், பொதுத் தேவை, பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வருடம் 6 பிரதேசங்களிலும் 14694 அங்கத்தவர்கள் பங்குபற்றுதலுடன் 354 கிளைக்கூட்டங்களும், 1256 பிரதேச நிர்வாகிகளின் பங்கு பற்றுதலுடன் 32 பிரதேச நிர்வாகக் கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன.





**03. துறைசார் நிபுணத்துவர்களைக் கொண்டு கிராம மக்களுக்குத் தேவையான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல்.**

கிராம மட்டங்களில் அடையாளம் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு இலகுவில் துறைசார் உத்தியோகத்தர்களை அணுகி தீர்வுகாண்பதற்கும், அவர்களுடனான சிறந்த தொடர்பை பேணும் வாய்ப்புக்களை மக்களுக்கு ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கிலும், கிராம மட்டத்தில் துரைசார் நிபுணர்களை அழைத்து அவர்களினால் வழங்கப்படும் சேவைகள் குறித்தும், அவற்றை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் விப்புணர்வு கருத்தரங்குகள் சுவாட் அமைப்பின் ஊடாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் அமைப்பின் செயற்பாட்டு பிரதேசங்களான 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கீழ் குறிப்பிடப்பட்ட தலைப்புக்களில் இவ்வருடம் 23 விழிப்புணர்வு

கருந்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இதில் 696 பேர் கலந்துகொண்டு துறைசார் ரீதியான பயனுள்ள தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

01. உளவள ஆற்றுப்படுத்தல்.
02. COVID - 19 வைரசினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும், அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளும்.
03. வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை முறைகளும், பயிர்களுக்கு எற்படும் நோய்த்தாக்கங்களும்.
04. குழந்தை வளர்ப்பும், அவர்களின் உடல் சுகாதாரம் பேணல்.
05. டெங்நோய் தடுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு.
06. தற்போதைய காலகட்டத்திற்கான சிறுவர் கல்வி நடவடிக்கைகள்.
07. தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம்.
08. கிராம மட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வழிமுறைகள்.
09. தொழில் வழிகாட்டல் / புதிய தொழில் முயற்சிகளை உருவாக்குதல்.

❖ கல்முனைப் பிரதேச நற்பட்டிமுனை 01 ,02, சேனைக்குடியிருப்பு, துரவந்தியமேடு, பாண்டிருப்பு ஆகிய கிளைகளில் உளவள ஆலோசகர்.திரு.பஸ்லீன் அவர்களை வளவாளராக கொண்டு உளவள ஆற்றுப்படுத்தல் தொடர்பாக 6 விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 127 அங்கத்தவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

❖ 25.06.2020ம் திகதி பொத்துவில் பிரதேசத்தில் COVID - 19 வைரசினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள், மற்றும் டெங்கு அபாயங்களும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறும் வழிமுறைகள் தொடர்பாகவும் சுகாதார பரிசோதகர் திரு.எஸ்எம்.சர்ஜுன் அவர்களைக்கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதில் 65 அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

❖ 21.06.2020ம் திகதி கல்முனை 01 கிளையில் விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர் திருமதி. ஜெயவிஜிதா அவர்களை பிரமுகராகக் கொண்டு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை தொடர்பாகவும், பயிர்களுக்கான நோய்த்தாக்கம், அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது இதில் 43 அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

❖ குழந்தை வளர்ப்பு மற்றும் அவர்களது உடல் சுகாதாரம் பேணல் தொடர்பாக கல்முனை-02 கிளையில் குழந்தை நல உத்தியோகத்தர் திருமதி.நித்யா அவர்கள் பிரமுகராகக் கொண்டு விழிப்புணர்வு நடாத்தப்பட்டது. இதில் 36 அங்கத்தவர்கள் கலந்து கொண்டார்கள்.

❖ பொத்துவில் ஏத்தம் கிளையில் கோவிட் 19 பாதிப்பினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட உளத்தாக்கங்கள் மற்றும் அதற்கான மாற்று வழிமுறைகளும் மாணவர்களது தற்போதைய கல்வி நடைமுறைகள் தொடர்பாகவும் உளவள அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.சுக்கூர் அவர்களைக் கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதில் 65 அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

❖ 17.07.2020ம் திகதி கோமாரி 02 கொரோனா மற்றும் டெங்கு நோய் தொடர்பான பரவுதல்களும் இதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பாகவும் சுகாதார பரிசோதகர் எஸ்.எம்.சர்ஜூன், அவர்களைக்கொண்டு விழிப்புணர்வு நடாத்தப்பட்டது. இதில் 23 அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

❖ வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை தொடர்பாகவும், பயிர்களுக்கு உண்டாகும் நோய்களும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் விவசாயபோதனாசிரியர் திருமதி.ச.புகழேந்தி அவர்களைக்கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதில் கல்முனை கிளை 02 அங்கத்தவர்கள் 25பேர் கலந்துகொண்டார்கள்.

❖ சேனைக்குடியிருப்பு கிளையில் கொரோனா தொற்றுநோய் தொடர்பாகவும், டெங்கு நோய்த்தொற்று தொடர்பாகவும் அதிலிருந்து எம்மைப் பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கானது 'பொது சுகாதாரப்பரிசோதகர் திரு.ப.வேல்முருகு அவர்களைக்கொண்டு நடாத்தப்பட்டது. இதில் 40 அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

❖ குழந்தை பிள்ளைகளை எவ்வாறு கவனிப்புடன் வளர்க்க வேண்டும் என்பது தொடர்பாக உளவள ஆலோசகர் திருமதி.ஆ.பௌமியா அவர்களைக்கொண்டு நற்பட்டிமுனை அங்கத்தவர்கள் 30பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

❖ சிறுவர் கல்வி தொடர்பாக பாலர் பாடசாலை ஆசிரியர் திருமதி.S.விஜயராணி அவர்களைக்கொண்டு நற்பட்டிமுனை 02 கிளை அங்கத்தவர்கள் 30 பேருக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

❖ மாநகர சபை உறுப்பினர் திருமதி.கு.விஜயலெட்சுமி, திருமதி.ச.நந்தினி அவர்களை வளவாளராக கொண்டு கல்முனை 02, நற்பிட்டிமுனை ஆகிய கிளை அங்கத்தவர்கள் 57 பேருக்கு கிராமத்திலுள்ள பொதுப் பிரச்சினைகளும் அவற்றுக்கு தீர்வு காணும் முறைகளும் பற்றியும் இரு விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

❖ அறநெறிப்பாடசாலை ஆசிரியை திருமதிS.கோகிலா அவர்களைக்கொண்டு சேனைக்குடியிருப்பு அங்கத்தவர்கள் 40 பெருக்கு பிள்ளைகளுக்கு ஒழுக்கக் கல்வியின் அவசியம் பற்றியும், கலாச்சார விழுமியங்கள் பகுறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

❖ தகவல் தொழில்நுட்பம் தொடர்பாகவும், கணனி அறிவின் முக்கியத்துவம் குறித்தும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் செல்வி. சீ.ஜனுப்பிரதா அவர்களைக்கொண்டு நற்பிட்டிமுனை 01 அங்கத்தவர்கள் 30 பேருக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

❖ வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை முறைகளும், பயிர்களுக்கு எற்படும் நோய்த்தாக்கங்களும் குறித்து விவசாயப்பபோதனாசிரியர் திருமதி.த.சியாமளா அவர்களைக்கொண்டு நற்பிட்டிமுனை-2 கிளை அங்கத்தவர்கள் 40 பேருக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

❖ திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ச.துர்க்காசினி அவர்களைக்கொண்டு துரவந்தியமேடு அங்கத்தவர்கள் 25 பேருக்கு தொழில் வழிகாட்டல், புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கல், தொழில்பயிற்சிநெறி நிலையங்கள் குறித்தும் விழிப்புணர்வு நடாத்தப்பட்டுள்ளது.

## 04. தொழில் திறன் அபிவிருத்தி திட்டம். (Vocational Skill Development)

### 4.1:Supporting inputs for selected beneficiaries to relevant skill development courses

தொழில் திறன்களைப் பெற்று வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து மீளத்திரும்பிய தொழிலாளர்களுக்கு தொழில் திறன்கள் தொடர்பான வழிகாட்டல், ஆற்றுப்படுத்தல்கள் ஊடாக தரமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு பங்களிப்புச் செய்யும் பொருட்டு சுவீஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி ஊதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இத்திட்டத்தின் கீழ் தொழில் திறன் பயிற்சியினை பூர்த்திசெய்துகொண்ட 54 பயனாளிகளுக்கு அவர்களின் பங்களிப்புடன் ஒரு மில்லியன் பெறுமதியான தொழில் உபகரணங்கள் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு.டி.எம்.எல்.பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் வழங்கிவைக்கப்பட்டது.





### 4.2: Providing Support for VT Centre

இத்திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தொழில் பயிற்சிநெறியினை மேற்கொள்ளம் பொருட்டு நிந்தவூர் மாவட்ட தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு Olac sewing machine ஒன்று சுவாட் அமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ளது. இதனூடாக 200 பேர் பயிற்சியினை பெற்று பயனடைந்துள்ளனர்.



### 4.3: VSD - Learning meeting at divisional level with relevant government officers

தொழில் திறன் அபிவிருத்தி குறித்து பிரதேசமட்டத்தில் பயிற்றுவிக்கப்பட்ட அரச அதிகாரிகளுடனான கலந்துரையாடல் 07 நடாத்தப்பட்டுள்ளது. இதில் 190 பேர் கலந்துகொண்டு இத்திட்டத்தினூடாக தாம் கற்றுக்கொண்ட விடயங்கள் குறித்தும், சாதக, பாதகமான மாற்றங்கள் குறித்து தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

### 4.4 : Sensitizing on VSD process, and concept to Village level government officer and CBOs leaders

கிராமிய மட்டத்தில் மக்களுடன் இணைந்து பணியாற்றும் அரச அதிகாரிகள் மற்றும் கிராமிய மட்ட அமைப்புக்களின் தலைவர்களை ஒன்றினைத்து தொழில் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயல்முறைகள் குறித்து உணர்வூட்டல் கலந்துரையாடல் (Sensitizing) ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 34 பேர் கலந்துகொண்டு தொழில் திறன் பயிற்சியினை எவ்வாறு பூர்த்திசெய்து பயிற்சிக்கான சான்றிதழ்களைப்பெற்று தொழில்களைப்பெற்றுக்கொள்வது என்பது குறித்த தகவல்களை அறிந்துகொண்டனர்.





## 05. சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கச் செயற்பாடு.
## Social cohesion and reconciliation activities. (SOCRE Project)

பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் இளைஞர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதனூடாக சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு இத்திட்டமானது USAID நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுவாட் அமைப்பினூடாக நாவிதன்வெளி (மத்தியமுகாம் 03), இறக்காமம் (வரப்பத்தான்சேனை 1,2) ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### 5.1: Provided beneficiaries for self-employment tools and equipment's.

USAID நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்ற சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயற்திட்டத்தின் கீழ் COVID – 19 வைரஸ் தொற்று காரணமாக தொழிலில் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்கள் மீள தம் தொழிலை ஆரம்பித்து பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நாவிதன்வெளி (மத்தியமுகாம் 03), இறக்காமம் (வரப்பத்தான்சேனை 1,2) ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 57 சிறுதொழில் பெண்முயற்சியயாளர்களுக்கு ரூபா 25,000.00 பெறுமதியான தொழில் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.







### 5.2: Providing self-employment support for Vulnerable youths.

இத்திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி (மத்தியமுகாம் 03), இறக்காமம் (வரப்பத்தான்சேனை 1,2) ஆகிய இரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட தொழிலில் பாதிக்கப்பட்ட 30 இளைஞர்களுக்கு தம் தொழிலை மீள ஆரம்பித்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதனூடாக சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் நோக்கில் தொழில்களுக்கான உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.






## 5.3: Providing 5000 Face Mask for Government officers and other CBOS (COVID19 Response)

சுவாட் அமைப்பின் ஊடாக (US- Global Communities) நிதி உதவியுடன் COVID – 19 தொற்றுக்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கும் கிராமிய மட்ட அமைப்புக்களுக்கும் 5000 முகக் கவசங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இதன் ஆரம்பகட்ட முகக்கவசங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வானது 26.03.2020ம் திகதி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு.வி.எம்.எல்.பண்டாரநாயக்கா அவர்களிடம் அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வைத்து சுவாட் அமைப்பின் தலைவர் திரு.வ.பரமசிங்கம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஆகியோரினால் ஒருபகுதி முகக்கவசங்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு வழங்கும் வகையில் கையளிக்கப்பட்டது. இதன்போது பொது இடங்களைத் தொற்றுநீக்கும் மருந்துகளை வினியோகிக்கும் வகையில் வெற்றுக்கேன் (19) சுவாட் அமைப்பினால் வழங்கிவைக்கப்பட்டது.





## 6. COVID-19 Emergency Response.

### 6.1 : Distributed Nonfood items & Hygienic pack for 2000 families.

சுவீஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி ஊதவியுடன் சுவாட் அமைப்பினால் முன்னெடுக்கப்படுகின்ற பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் செயற்திட்டத்தின் ஊடாக COVID – 19 வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள சீரற்ற நிலைமை காரணமாக புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் வறிய குடும்பங்களின் வருமானமற்ற நிலையினை கருத்தில்கொண்டு அவர்களுடைய உணவுத் தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் அம்பாறை மாவட்ட பொத்துவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, இறக்காமம், உகண, சம்மாந்துறை, தமண ஆகிய 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 2000 குடும்பங்களுக்கு சுகாதார மற்றும் உலர் உணவுப் பொதிகள் சுவாட் அமைப்பின் ஊடாக வழங்கிவைக்கப்பட்டது.






### 6.2: Distributed Vegetable seeds for 3000 families.

சுவாட் அமைப்பினால் பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் செயற்திட்டத்தின் ஊடாக COVID – 19 வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள சீரற்ற நிலைமை காரணமாக மக்கள் தமது அன்றாட உணவு தேவையினை வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை ஊடாக உற்பத்திசெய்து பெற்றுக்கொள்வதன்னூடாக நோயற்ற ஆரோக்கியமான வாழ்வில் வழிவகுக்கும் நோக்கில் அம்பாறை மாவட்ட பொத்துவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, இறக்காமம், உகண, சம்மாந்துறை, தமண ஆகிய 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 3000 குடும்பங்களுக்கு கத்தரி, தக்காளி, பீக்கை, கொச்சி, பாகை போன்ற விதையினங்கள் ஒருவருக்கு 250/= வீதம் ரூபாய் 750,000.00 இற்கு கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளன.





**6.3: Distributed Mask, Safety kit and sprayer for MOH office.**

COVID – 19 வைரஸ் தொற்று நீக்கி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்குடன் சுவீஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் (Swiss Agency for Development and Cooperation) நிதி உதவியுடன் சுவாட் அமைப்பின் ஊடாக ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிற்கும், இவ்விரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள பாடசாலைகளுக்கும் 10 கிருமி தொற்றுநீக்கி தெளிகருவிகள் ரூபாய் 250,000.00 செலவில் கொள்வனவு செய்து வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

**6.3.1: ஆலையடிவேம்பு பிரதேச பாடசாலைகளுக்கான தொற்றுநீக்கி தெளிகருவிகள் கையளிப்பு நிகழ்வானது** 22.06.2020ம் மு.ப. 11.00 மணிக்கு ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில், ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி Doctor Mr.S.அகிலன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது். மேற்படி கிருமி தொற்றுநீக்கி தெளிகருவிகள் சுவாட் அமைப்பின் தலைவர் திரு.வ.பரமசிங்கம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் திரு.க.பிறேமலதன் அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





**6.3.2: திருக்கோவில் பிரதேச பாடசாலைகளுக்கான தொற்றுநீக்கி தெளிகருவிகள் கையளிப்பு நிகழ்வானது** 01.07.2020ம் திகதி திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி Doctor Mr.M.A பிரசாத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருக்கோவில் பிரதேச செயலாளர் திரு.T.கஜேந்திரன் மற்றும் பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மேற்படி கிருமி தொற்றுநீக்கி தெளிகருவிகள் சுவாட் அமைப்பின் தலைவர் அவர்களினால் வழங்கிவைக்கப்பட்டன.







### 6.3.3: Safety kit & Surgical face masks.

சுவீஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுவாட் அமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற COVID- 19 அவசரகால நிவாரண பணி செயற்திட்டத்தின் கீழ் COVID – 19 வைரஸ் தொற்று நீக்கி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் பணியில் ஈடுபடுகின்ற சுகாதார மருத்துவ அதிகாரிகளின் பாதுகாப்பு கருதி ரூபாய் 240,000.00 செலவில் 200 Safety kit மற்றும் 500,000.00 ரூபாய் செலவில் 5000 Surgical face masks சுவாட் அமைப்பினுாடாக கல்முனை பிராந்திய சுகாதார வைத்திய சேவைகள் பணிப்பாளர் திணைக்களத்திற்கு 27.05.2020ம் திகதி வழங்கிவைக்கப்பட்டன.

### 7.பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டம்.

Swiss Development Cooperation -SDC நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுவாட் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டு வருகின்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம் பெயர்வதற்கான வழிகாட்டல் (Safe labor migration) திட்டமானது அம்பாரை மாவட்டத்தில் உள்ள பொத்துவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, இறக்காமம், உகண ஆகிய 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**7.1 : Conducting 1day volunteer training on safe labour migration and 30 Participants participated.**

பாதுகாப்பான தொழிலாளர் புலம்பெயர்வு குறித்த விழிப்புணர்வை கிராம மக்களுக்கு வழங்கும் நோக்கில் இத்திட்டச் செயற்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 தொண்டர்களுக்கு இத்திட்டத்தினுாடக ஒருநாள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.





**7.2: Quarterly refresher and review meeting with DO-FE and other officers.**

இத்திட்டத்தின் ஊடாக திட்ட செயற்பாட்டு பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள புலம்பெயர் தொழிலாளர் நலன்புரிச்சங்கங்களுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து சேவையினை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவதிலுள்ள காணப்படும் நடைமுறைப்பிரச்சினைகள் மற்றும் சாதகமான மாற்றங்கள் தொடர்பிலான இரு மீளாய்வுக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் 78 DO-FE கலந்துகொண்டுள்ளனர்.





## 7.3: Facilitate and support Migrant workers related initiative activities through Migrant societies.

சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தினத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வு சுவாட் அமைப்பினால் பிரதேச செயலகத்துடன் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டு இத்திட்ட செயற்பாட்டு பிரதேசங்களான 7 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 7 நிகழ்வுகள் இவ்வருடம் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் DS,ADP,AO-GN,GS,DDO,CA,DOs,Mediation member, Paralegals, உற்பட 550பேர் கலந்துகொண்டனர்.





## 7.4: Paralegal District conference meeting.

கிராம மட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கும் சட்டப்பிரச்சினைகளுக்கான சட்ட ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற செயற்பாடுகளில் எதிர்நோக்கும் சாதாக பாதகங்களை ஆராய்ந்து அவற்றுக்கான இலகுபடுத்தல்களை மேற்கொண்டு வழங்கும் நோக்கில் பயிற்றுவிக்கப்பட்ட சட்ட உதவியாளர்களுக்கான (Government officers, mediation board members, CBOs, volunteers) மாவட்ட மட்டத்திலான மாநாட்டு கலந்துரையாடல் 2 நடாத்தப்பட்டுள்ளது. இதில் 125பேர் கலந்துகொண்டுள்ளனர்.





**7.5: .Finance literacy advance training on selected migrant families.**

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படுகின்ற நிதியினை புலம்பெயர்வின் உரிய நோக்கத்தினை அடைவதற்கு பயன்படுத்தும்பொருட்டு நிதிக் கையாள்தல், நிதிமுகாமைத்துவம் செய்தல் தொடர்பாக 9 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள புலம்பெயர் தொழிலாளர் சங்க உறுப்பினர்களுக்கு நிதிமுகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நடாத்தப்பட்டுள்ளது. இதில் 320பேர் கலந்துகொண்டனர்.





**7.6: Workshop on SLMP Learning Reflection at district level.**

சுவீஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சுவாட் அமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இத்திட்டத்தினூடாக மக்கள் அடைந்த சாதக, பாதக மாற்றங்கள் குறித்த கற்றல் பிரதிபலிப்பு தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் மாவட்ட அளவிலான கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டது. இதில் 56 அரசு அதிகாரிகள் மற்றும் பிற பங்குதாரர்கள் கலந்துகொண்டனர்.






## 7.7: Purchasing office chair and name board for 9 Migrant societies.

மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்புரி, உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட மற்றும் தேசிய ரீதியில் குரல் கொடுக்கும் நோக்கில் இத்திட்டத்தின் கீழ் 9 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 30 புலம்பெயர் தொழிலாளர் நலன்புரி சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இச்சங்கங்கங்கள் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் உரிய அதிகாரிகளை வளவாளராக கொண்டு மக்களுக்கு தெளிவூட்டல், பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது குறித்த தகவல்களை வழங்கல்,புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் காணப்படுகின்ற தேவை, பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கு உரிய அதிகாரிகளை நாடி தீர்வுகாணல் போன்ற பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இச்சங்கத்தினூடாக ஊடாக வினைத்திறனான சேவைகளை புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இத்திட்ட 9 புலம்பெயர் தொழிலாளர் நலன்புரிச் சங்கங்களக்கும் 250 கதிரைகள் சுவாட் அமைபினூடாக வழங்கப்பட்டுள்ளது.